**ஜனவரி – 27**

# TNPSC துளிகள்

- பாதுகாப்பு அமைச்சகமானது 70-வது குடியரசு தினத்தில் RDP இந்தியா 2019 எனும் கைபேசி செயலியை தொடங்கியுள்ளது. இந்த செயலியை பயன்படுத்தி இந்த ஆண்டு ராஜ பாதையில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பின் சிறப்பம்சங்களை பார்க்க முடியும்.
  - இந்த முன்முயற்சியானது அரசின் டிஜிட்டல் இந்தியா பிரச்சாரத்துடன் ஒத்திசைந்துள்ளது.
- ஜப்பான் மற்றும் இந்தியக் கடலோரக் காவல் படையினர் இணைந்து ஜப்பானின் யோகோகாமா கடற்கரைப்பகுதியில் பேரிடர் கட்டுப்பாடு, தேடல் மற்றும் மீட்புப் பயிற்சியினை மேற்கொண்டனர். கடந்த ஆண்டு ஜப்பான் நாட்டு கப்பல்களுடன் இந்தியா இப்பயிற்சியை நடத்தியது. இந்த ஆண்டு ஜப்பான் இப்பயிற்சியை நடத்துகிறது.
  - ICGS ஷவ்னாக் இந்த ஒத்திகையில் பங்கேற்கும் பிரதான இந்தியக் கப்பல் ஆகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## BBBP திட்டத்திற்கான தமிழ்நாட்டிற்கு விருது

- புது டெல்லியில் நடைபெற்ற தேசிய பெண் குழந்தைகள் தின விழாவில் தமிழ்நாடு மாநில அரசானது மத்திய அரசின் பெண் குழந்தைகளை பாதுகாப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் (Beti Bachao Beti Padhao- BBBP) சிறந்த செயல்பாட்டிற்காக 2 விருதுகளைப் பெற்றுள்ளது.





- தமிழ்நாடானது BBBP திட்டத்தில் ஒட்டுமொத்த ஒத்துழைப்பு, வழிகாட்டல், கண்காணிப்பு மற்றும் இலக்கை அடைதல் ஆகிய பிரிவுகளில் சிறந்த செயல்பாட்டிற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- மேலும் தமிழகமானது BBBP திட்டத்திற்கென தமிழ்மொழியில் வழிகாட்டும் புத்தகமொன்றை வெளியிட்டதற்காகவும் ஒரு பரிசினை வென்றது.
- செயல்திறன் வாய்ந்த சமூக மேலாண்மை பிரிவில் மாவட்ட அளவிலான விருதிற்கு திருவண்ணாமலை மாவட்டம் தேர்வு செய்யப்பட்டது.

## உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019

- உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் (Global Investors Meet-GIM) இரண்டாவது பதிப்பானது தமிழகத்தின் சென்னையில் ஜனவரி 23, 24 ஆகிய தேதிகளில்

நடைபெற்றது.

- தமிழக அரசானது இந்த இரண்டாவது மநாட்டில் 3,00,431 கோடி ரூபாய் அளவில் முதலீடு செய்வதற்கான 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடப்பட்டது.
- இதில் முந்தைய பதிப்பில் பெற்ற 7% அளவிலிருந்து கணிசமான அளவில் உயர்ந்து ஒட்டு மொத்த முதலீட்டில் MSME-யின் பங்கு மட்டும் 11% ஆக உள்ளது.
- இதன் முதல் பதிப்பானது தமிழ்நாட்டின் சென்னையில் 2015-ல் நடைபெற்றது.



**GIM IN NUMBERS**

The MoUs include investment commitments from companies from countries like Japan, Korea and Germany, the CM said

| Sector | No. of MoUs | Investment commitment (₹ Cr) | Employment potential |
|---|---|---|---|
| Major industry (manufacturing) | 146 | 1,54,648 | 4,73,871 |
| MSME (small businesses) | 12,360 | 32,206 | 2,90,057 |
| Housing | 70 | 57,381 | 92,526 |
| Energy | 15 | 40,700 | 14,235 |
| IT | 10 | 11,674 | 1,66,171 |
| Higher Education | 50 | 1,013 | 6,797 |
| Tourism | 8 | 642 | 1,284 |
| School Education | 3 | 157 | 1,200 |
| Agriculture | 2 | 2,010 | 10,000 |

**POLICIES IN PIPELINE**

**TEXTILE** | The government is working on a new policy for the textile industry. "A new integrated textile policy will be unveiled soon. It will have incentives for the sector," said textile minister OS Manian

**ELECTRONIC MANUFACTURING** | "With an eye on capturing 'at least 10%' of the $1-trillion electronics market opportunity in India, a draft policy is almost ready and we are hoping to release it in February," said IT secretary Santhosh Babu. The policy will be in line with the National Electronics Policy 2.0

**RENEWABLE ENERGY** | TN Solar Energy Policy has been drafted and finalised. It will be released in a week, said state energy secretary Md Nasimuddin. Apart from incentives for solar power projects, the policy will also speak about rooftop solar power projects

# தேசியச் செய்திகள்

## இந்தியா ஆப்பிரிக்கா களப்பயிற்சி

- இந்தியா ஆப்பிரிக்கா களப்பயிற்சியானது (Indian Africa Field Training Exercise-IAFTX) 2019 மார்ச் 18 முதல் 27 வரை புனேவில் நடைபெறவுள்ளது.
- இந்த IAFXT கூட்டுப் பயிற்சியானது இந்தியா மற்றும் 12 ஆப்பிரிக்க நாடுகளுக்கிடையே நடத்தப்படவுள்ளது.
- இந்த கூட்டுப்பயிற்சியானது மனிதாபிமான சுரங்க நடவடிக்கைகள் மற்றும் கூட்டு சமாதான நடவடிக்கைகளில் இராணுவங்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இந்த பயிற்சியானது ஐ.நாவின் அமைதிப்படை நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடனும் நடத்தப்படுகின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## புளூம்பெர்க் புத்தாக்கக் குறியீடு 2019

- சமீபத்தில் 2019 ஆம் ஆண்டில் உலகின் அதிக புத்தாக்கங்களைக் கொண்ட 60 பொருளாதாரங்களின் பட்டியலான புளூம்பெர்க் புத்தாக்கக் குறியீடு

வெளியிடப்பட்டுள்ளது.

- புளூம்பெர்க் புத்தாக்கக் குறியீட்டில் இந்தியா முதன்முறையாக இந்தப் பட்டியலில் இடம் பெற்று 54-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தப் பட்டியலில் ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, மெக்சிகோ, வியட்நாம், பிரேசில், குவைத், கத்தார், சிலி, அர்ஜெண்டினா, ஸ்லோவேனியா ஆகிய நாடுகள் முதன்முறையாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- புளூம்பெர்க் புத்தாக்கக் குறியீட்டில் தென்கொரியா 87.38 என்ற மொத்த மதிப்புடன் தொடர்ந்து ஆறாவது முறையாக முதலிடத்தில் உள்ளது.




- இதற்கு அடுத்து ஜெர்மனி, பின்லாந்து, ஸ்விட்சர்லாந்து, இஸ்ரேல், சிங்கப்பூர், ஸ்வீடன், அமெரிக்கா, ஜப்பான் மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன.
- 2018 ஆம் ஆண்டின் புளூம்பெர்க் புத்தாக்கக் குயியீட்டில் முதல் பத்து இடங்களில் இருந்து வெளியேறிய அமெரிக்கா, இந்த ஆண்டின் பட்டியலில் மீண்டும் முதல் பத்து இடங்களில் இடம் பிடித்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## எஸ்எம்எஸ் மூலம் தகவல் இணையச் சேவை - பிஸ்என்எல்


- இணைய வசதியற்ற அல்லது அலைவரிசை துண்டிப்பு ஏற்படும் பகுதிகளில் குறுந்தகவல்கள் மூலம் தகவல் இணையச் சேவையை வழங்குவதற்காக பிஎஸ்என்எல் (BSNL) நிறுவனம் பிரெஞ்சின் பி-பவுண்ட் என்ற நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்தத் தொழில்நுட்பம் முதன்முறையாக பிரான்சில் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இது பல ஆப்பிரிக்க நாடுகளில் சோதனை செய்யப்பட்டு வருகிறது.
- குறுந்தகவல் வழி தகவல் இணையச் சேவையானது கைபேசியில் பொருத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படவிருக்கிறது.
- இந்தச் செயலியானது பயனாளியின் பகுதியில் மோசமான அலைவரிசை இணைப்பு இருப்பின் அதனைக் கண்டறியும். அவ்வாறு இருப்பின் இச்செயலியானது பி-பவுண்ட்

சர்வருக்கு சமிக்ஞையை அனுப்பும்.

- இச்செயலியின் மூலப் பெறப்பட்ட சமிக்ஞையையடுத்து பி-பவுண்ட் சர்வர் குறுந்தகவல் வழி இணையச் சேவை இணைப்பு வசதியை ஏற்படுத்தும்.
- செயலி மற்றும் சர்வர் ஆகியவற்றிகிடையே குறுந்தகவல் பரிமாற்றத்தின் மூலம் இந்த இணைப்பு ஏற்படுத்தப்படுகிறது.

## கலாம்சாட்-V2 – எடைகுறைந்த செயற்கைக்கோள்

- இஸ்ரோ ஆனது ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்திலிருந்து நான்கு நிலைகளைக் கொண்ட துருவ செயற்கைக்கோள் ஏவுவாகனத்தின் (Polar Satellite Launch Vehicle - PSLV) மூலம் கலாம்சாட்-V2 என்ற செயற்கைக் கோளை விண்ணில் ஏவியுள்ளது.
- இச்செயற்கைக் கோளானது முன்னாள் குடியரசுத் தலைவர் மற்றும் இந்திய விஞ்ஞானியான டாக்டர் அப்துல் கலாமின் நினைவாக பெயரிடப்பட்டுள்ளது.
- இது இதுவரை வடிவமைக்கப்பட்டிராத மற்றும் புவிவட்டப்பாதைக்கு அனுப்பப்படாததுமான குறைந்த எடை கொண்ட செயற்கைக் கோளாகும். மேலும் இது தனியார் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு செலுத்தப்பட்ட இஸ்ரோவின் முதலாவது செயற்கைக் கோளாகும்.




- இது வணிகமற்ற நடவடிக்கைகளுக்காக தொழில்சாரா அமைப்பினரால் பயன்படுத்தப்படும் கம்பியில்லா தொடர்பின் ஒரு வடிவமான ஹாம் கதிர்வழி அலை செலுத்துகைக்கான தகவல் தொடர்பு செயற்கைக் கோளாகும்.
- இச்செயற்கைக் கோளானது சென்னையை மையமாகக் கொண்டு செயல்படும் விண்வெளிக் கல்வி நிறுவனமான ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியாவைச் சேர்ந்த மாணவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இச்செயற்கைக்கோளின் மதிப்பு இந்திய மதிப்பில் 1.2 மில்லியன் ஆகும். இச்செயற்கைக்கோள் 6 நாட்களில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இஸ்ரோவானது இந்த ஏவுதலின் மூலம் பயனற்ற செயற்கைக்கோளின் நிலையை மீட்டெடுக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. விண்வெளியில் சிறிய அளவிலான ஆய்வுகளை நடத்துவதற்காக செயற்கைக் கோளின் 4-வது நிலையை சோதனை சுற்றுவட்டப்பாதைத் தளமாக மாற்றி ஒரு புதிய முயற்சியை இஸ்ரோ மேற்கொண்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பாரத ரத்னா விருது 2019

- இந்தியக் குடியரசுத் தலைவர் நாட்டின் உயரிய குடிமக்கள் விருதான 2019 ஆம் ஆண்டின் பாரத ரத்னா விருதை முன்னாள் குடியரசுத் தலைவர் மற்றும் காங்கிரஸ் தலைவர் பிரணாப் முகர்ஜிக்கு வழங்கினார்.
- மேலும் இவ்விருதானது மறைந்த ஆர்எஸ்எஸ் சிந்தனையாளரான நானாஜி தேஷ்முக் மற்றும் மறைந்த பாடகர் பூபென் ஹசாரிக்கா ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- 1954 ஆம் ஆண்டு ஜனவரி 02 ஆம் தேதி இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரான இராஜேந்திர பிரசாத்தின் ஆணையின் மூலம் இந்தியாவின் உயரிய குடிமக்கள் விருதான பாரத ரத்னா ஏற்படுத்தப்பட்டது.

## அசோக சக்ரா

- இந்தியாவின் அமைதிக்கால சிறப்பு விருதான அசோக சக்ரா விருது மறைந்த லான்சு நாயக் நசீர் வாணிக்கு வழங்கப்பட்டது.
- மேலும் அசோக சக்ரா விருது வழங்கப்பட்ட முதலாவது காஷ்மீரிய குடிமகன் என்ற பட்டத்தையும் வென்று நாயக் நசீர் வாணி பெற்றுள்ளார்.



- இவர் சோப்பியான் நடவடிக்கையின்போது தனக்கு பலத்த காயங்கள் ஏற்பட்ட போதிலும் தனிநபராக இரு தீவிரவாதிகளைக் கொன்றதுடன் மூன்றாவது தீவிரவாதியையும் தாக்கினார்.
- அசோக சக்ரா விருதானது போர்க் களத்திற்கு வெளியே வீரம், வீரதீர நடவடிக்கை அல்லது தியாகம் ஆகியவற்றிற்காக வழங்கப்படும் இந்தியாவின் உயரிய அமைதிக்கால விருதாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## சென்னை ஓபன் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் சதுரங்கப் பேட்டி

- ரஷ்யாவின் GM மேக்சிம் லுகோவ்ஸ்காய்–ஐ தோற்கடித்து ஜார்ஜியாவின் லெவன் பன்சுலையா 11-வது சென்னை ஓபன் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் சதுரங்கப் போட்டித் தொடரை வென்றார்.
- இது டெல்லியில் இரண்டு வாரங்களுக்கு முன்பு நடைபெற்ற டெல்லி ஓபன் போட்டியில் வென்ற லெவனின் இரண்டாவது அடுத்தடுத்த வெற்றியாகும்.
- தமிழ்நாட்டின் M. பிரனேஷ் தனது முதல் சர்வதேச மாஸ்டர்க்கான நிலையை இந்த போட்டியின் போது பெற்றார்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச இனப் படுகொலை நினைவு தினம் – ஜனவரி 27

- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதி உலகம் முழுவதும் சர்வதேச இனப் படுகொலை நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.
- இரண்டாம் உலகப்போரின் போது ஏற்பட்ட இனப் படுகொலையை இத்தினம் நினைவுக்கூர்கிறது.
- 2005 ஆம் ஆண்டு நவம்பர் 01 அன்று நடைபெற்ற 42-வது ஒரு முழுமையான அமர்வின்போது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள ஒரு தீர்மானத்தின் மூலம் ஜனவரி 27 ஆம் தேதி சர்வதேச இனப் படுகொலை நினைவு தினமாக அனுசரிக்கப்பட்டது.




- 1945 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதி மிகப்பெரிய அளவில் வாழும் நாசிகள் குடியிருப்பு மற்றும் இறப்பு முகமான அஸ்விட்ஸ் பிர்கெனு பகுதியானது சிவப்பு இராணுவத்தால் விடுவிக்கப்பட்டது.

- - - - - - - - - - - - - - -